# பதினெண் சித்தர் பாடல்களில் சமூகநல்லிணக்க சிந்தனைகள்

**M. Selvakumari**
Department of Languages
South Eastern University of Sri Lanka
selvakumari.selva@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**:

தமிழ் இலக்கிய பரப்பில் பதினெண் சித்தர் பாடல்களுக்கு தனித்துவமான இடமுண்டு. இப்பாடல்களானவை சித்தவைத்திய முறையினைத் தெளிவாக விளக்கி நிற்பதோடு, இன, மத வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட நிலையில் நின்று மனிதகுலம் அனைத்தினையும் ஒன்று சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. உயிர்களிடம் அன்பு செலுத்துதல், தீண்டாமை, பெண் நலன் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து அக்கருத்துக்களை எடுத்தியம்பும் வகையில், சாதிபிரிவினைத் தீமூட்டுவோம், சாதிபேதமில்லை, சாத்திரம் இல்லையடி, நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம், என சாதிப்பாகுபாட்டிற்கெதிராகவும், பெண் நலன் பேணும் வகையில், மாதராய் வந்து அமுதம் தந்தால், பெண்ணும் இல்லாமல் ஆணும் இல்லை என ஆண், பெண் சமத்துவத்தினையும் முன்வைத்து சமூகத்தினை ஒருங்கிணைக்கும் முயற்சியினை மேற்கொள்ளும் வகையில் அமையப் பெற்றுள்ளன. பொதுவாக, சித்தர் பாடல்களானவை மனிதகுலத்தினை சமநிலையில் நோக்கும் வகையிலும், மானிடப்பிறவியின் பெருமையினைப் போற்றும் வகையிலும் அமையப் பெற்றுள்ளன. இதற்கு சிவவாக்கியர், பட்டினத்தார், உலகாயச்சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச்சித்தர் போன்றவர்களது பாடல்களை குறிப்பிடலாம். இவ்வாய்வின் நோக்கம் பதினெண் சித்தர் பாடல்களாக வெளிப்படும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளை இனங்கண்டு, அவற்றின் முக்கியத்துவத்தினை சமூகத்திற்கு கொண்டு செல்லலாகும். பதினெண் சித்தர் பாடல்கள் சமயம், தத்துவம், அறிவியல் என்பனவற்றுடன் சமூகநல்லிணக்கம் பற்றிய எண்ணக்கருக்களையும் முன்வைத்துள்ளன என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு நகர்கிறது. **சமூகநல்லிணக்கம்** பேசுவனவற்றுள் சித்தர் பாடல்களுக்கு தனித்துவமான இடமுண்டு என்ற கருதுகோளின்அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதினெண் சித்தர் பாடல்களை முதலாம் நிலைத்தரவாகவும், ஏனைய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பனவற்றினை இரண்டாம் நிலைத்தரவாகவும், சமூகவியல், ஒப்பீட்டு, விபரண ஆய்வு முறைமைகளும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

***பிரதான சொற்பதங்கள்****: சித்தர் பாடல்கள், சமூகநல்லிணக்கம், தீண்டாமை, மனிதநேயம், சமதர்மம்.*

## அறிமுகம்:

மனிதனது பெருமை, உரிமை, ஆற்றல் என்பனவற்றினைப் போற்றி, இன, மத, சாதி, ஆண், பெண் வேறுபாடுகளைக் களைந்து சமூகத்தை சீர்திருத்தி சமூக ஒருமைப்பாட்டிற்கு வழி வகுப்பனவாக சித்தர் பாடல்கள் காணப்படுகின்றன. சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி அனைவரையும் சமத்துவமாக நோக்குவதே மனித நேயத்தின் அடிப்படை அம்சமாகும். ஆனால், இன்றைய நிலையில் மனிதம் பேணப்படுகின்றதா என்பது ஐயத்திற்குரியதே. கொலை, களவு, தீண்டாமை, பெண்ணடிமை எனப் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே இன்றைய சமூகம் காணப்படுகின்றது. உலகப் போகங்களுக்கு முதன்மை வழங்கும் மனிதன் மனிதனை மனிதனாக மதிப்பதற்கு தவறி விடுகின்றான். மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக பதினெண் சித்தர் பாடல்கள் காணப்படுகின்றன. அகத்தியர் ‘ ஞான காவியம்’ என்ற நூலில் மனிதன் வாழும் முறை எவ்வாறு இருக்க வேண்டும் எனத் தெளிவாக விளக்கியுள்ளார். அதாவது,

இந்நூலில் செய்யக் கூடாதவற்றினைத் தவிர்த்து அற நியமத்தின் படி வாழ வேண்டும் என்கிறார்.

''காணடா புலத்தியனே காமுகர்க்கு
கழுதையென்ற கருமிகட்குப் பலிதமில்லை...

தாணடா இருந்தபடி உலகோர்க்கு
நல்வினை கண்டிருப்போர்க்கு அதீதசித்தி..''

குதம்பைச் சித்தரது பாடல்களானவை சாதிப் பிரிவினைகள், சமய நல்லொழுக்கம், நீதி, நேர்மை ஆகியவற்றினை வலியுறுத்தி சமூக நல்லுணர்வை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. அதே போன்று சித்தர் சிவவாக்கியரும் சாதி, சமய வேறுபாடுகளைக் கடுமையாக சாடியுள்ளார். மேலும், இவர் ஆண், பெண் என இருசாதிகள் மட்டுமே உள்ளன. மற்றவையெல்லாம் வீண்சாதிகளாகும் என சாதி, பேதத்தை முழுமையாக வெறுக்கும் வகையில் தன் கருத்தினை முன்வைத்துள்ளார்.

''ஆண்சாதி பெண்சாதி ஆகும் இருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் - குதம்பாய்
வீண்சாதி மற்றவெல்லாம்
பார்பர்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன - குதம்பாய்
தீர்ப்பாகச் சொல்வதென்ன
நீதிமானென்றே நெறியாய் இருப்பானே
சாதிமான் ஆவானடி
சாதிமான்ஆவானடி
சாதியொன்றில்லை சமயமொன்றில்லை என்று
ஓதி உணர்ந்தறிவாய் - குதம்பாய்
ஓதி உணரந்தறிவாய்''

அதாவது, இப்பாடலில்,

ஆண், பெண் ஆகிய இரு சாதிகளைத் தவிர ஏனைய சாதிகள் அனைத்தும் வீணானவை என்றும், பார்ப்பர்கள், பறையர்கள் என்று ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்றும், சாதி, மத வேறுபாடு இல்லை என்றும் குறிப்பிடுகிறார். அகப்பேய்சித்தர், காகபுசுண்ட சித்தர், பாம்பாட்டிச் சித்தர் ஆகியோர் அறவாழ்வின் முக்கியத்துவத்தினையும், சாதி வேறுபாட்டினையும், ஆண், பெண் சமத்துவத்தினையும் பேணும் வகையில் பல பாடல்களைப் பாடி சமூகத்தை சீர்திருத்த முயன்றுள்ளனர்.

அகப் பேய்ச் சித்தர் கூறுகையில்,

''சாதி பேதமில்லை அகப்பேய்
தானாகி நின்றவர்க்கே
ஓதி உணர்ந்தாலு அகப்பேய்
ஒன்றுந்தான் இல்லையடி''

என்றும்,

காகபுசுண்டர் கூறுகையில்,

'காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை..''

என்றும்,

சிவவாக்கியர் கூறுகையில்,

''சாதி ஆவது ஏதடா சலந்திரண்ட நீரெலாம்
..................................................
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்னதன்மையோ''

என்றும்,

'சாதி சாதி சகாரத்ததைக் கண்டிடான்'

என்றும்,

''....போதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகள்
சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே''

என்றும்,

பட்டினத்தார் கூறுகையில்,

''சாதியில் கூடுவாரோ ∴ சாத்திரத்துக்கு உள்ளாமோ
ஓதி உணர்ந்ததெல்லாம் உள்ளபடி ஆச்சுதடி''

என்றும்,

பாம்பாட்டிச் சித்தர் கூறுகையில்,

''சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்
வீதிப் பிரிவினிலே விளையாடிடுவோம்''

என்றும்,

''சமயபேதம் பலவான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கே அல்லாதுசற் சாதுகளுக்கோ''

என்றும்,

கொங்கணச் சித்தர் கூறுகையில்,

''சாதி பேதங்கள் சொல்லுகிறிர் தெய்வம்
தானென் றொருவுடல் பேதமுண்டோ...''

என்றும் கூறி சாதிப் பிரிவினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்துவதனைக் காணலாம். அதாவது, இன, மத, சாதி, குல வேறுபாடு பார்த்தல் தவறானது என்பது சித்தர்களது கருத்தாக அமைகிறது.

இச்சந்தர்ப்பத்தில:,

''சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்''

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும' எவரும் ஒருமையாளராகி
உலகியல் நடத்தல் வேண்டும்''

எனும் இராமலிங்க அடிகளது கூற்றும் குறிப்பிடற்பாலது.

ஆண், பெண் சமத்துவத்தினை வலியுறுத்தும் வகையில் சித்தர் சிவவாக்கியர்,

'பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்'

எனக் கூறுகிறார்.

மேலும்,

''கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற
கற்பை யளித்தவரே வாழ்க...''

என பெண்ணின் பெருமையினைப் போற்றுகிறார். இறைவனை அடைவதற்கு பெண் தடையானவள் எனும் காரணத்தைக் காட்டி பெண்ணை இழிவாகவே சித்தர்கள் நோக்கியுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடற்பாலது.

சூது , பொய் என்பன சுற்றத்தை இல்லாமல் அழித்துவிடும் எனவே, அவற்றினின்று விடுபட்டு உறவுகளை வளம்படுத்த வேண்டும் எனக் கூறுகிறார். இக்கருத்தினை கடுவெளிச்சித்தரது பாடல்களில் கண்டு கொள்ள முடிகிறது. அப்பாடல் வருமாறு:

''சொல்லரும் சூது பொய் மோசம் - செய்தால்
சுற்றத்தை முற்றாய்த' துடைத்திடும் நாளும்
நல்ல பக்தி விசுவாசம் - எந்த
நாளும் நன்மையாம் மனிதர்க்கு நேசம்''

ஏனைய உயிரினங்களையும் துன்புறுத்தாது தன்னுயிர் போல் கருத வேண்டும் என்பதனை
பத்திரகிரியார்,

''மன்னுயிரைக் கொன்று வதைத்து உண்டுஉழலாமல்

தன்னுயிர்போல எண்ணித்தவம்முடிப்பது எக்காலம்''

என்றும்,
நல்ல விரதம் எது என்பது பற்றி கூறுகையில், உயிர்களைக் கொல்லாமையே நல்ல விரதம் என்பது குதம்பைச் சித்தர் அவர் தம் கருத்தாகும்.

''கொல்லலவிரதம் குளிர்பசி நீக்குதல்
நல்லவிரதமடி - குதம்பாய்
நல்லவிரதமடி....''

அனைத்துயிர்களும் பரத்தினுள் அடக்கம் என்பதனை சிவவாக்கியர்,

''ஆவதும் பரத்துளே அழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே யானும் அப்பரத்துளே''

மேலும்,
சமூகப் பிரிவினைகளுக்குரிய பிரதான காரணங்களில் ஒன்றாக சொத்துரிமை காணப்படுகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பிறக்கும் உயிர்களனைத்தும் இறப்பது வழமை. ஆனால், இதனை எண்ணாது பொருட்கள் மீது ஆசை கொண்டு குறிப்புப் பேசித் திரிகின்றனர். இவ்வாறு அவர்கள் கொள்ளும் கோலம் என்னவோ என வினவி சொத்தாசையினைத் தவிர்த்து வாழ்வதற்கு வழிகாட்டுகிறார். இதனை சிவவாக்கியர்,

''பிறப்பதெல்லாம் இறப்பதுண்டு பேதைமக்கள் தெரிகிலாது
இறப்பதில்லை எனமகிழ்ந்து எங்கள் உங்கள் சொத்தெனக்
குறிப்புப்பேசித் திரிவரன்றிக் கொண்டகோலம் என்னவோ…......''

என்ற பாடல் மூலம் அறியத்தருகிறார்.

**ஆய்வின் நோக்கம்:**

பதினெண் சித்தர் பாடல்க;டாக வெளிப்படும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளை இனங்கண்டு, அவற்றின் முக்கியத்துவத்தினை சமூகத்திற்கு கொண்டு செல்லல்.

**ஆய்வுப் பிரச்சினை:**

பதினெண் சித்தர் பாடல்கள் சமயம், தத்துவம், அறிவியல் என்பனவற்றுடன் சமூக நல்லிணக்கம் பற்றிய எண்ணக்கருக்களையும் முன்வைத்துள்ளன.

**தகவல் சேகரிப்புநுட்பமுறை:**

பதினெண் சித்தர் பாடல்கள் முதலாம் நிலைத்தரவாகவும், ஏனைய நூல்கள் கட்டுரைகள் , சஞ்சிகைகள் ஆகியன இரண்டாம் நிலைத்தரவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு முறைமை:**

சமூகவியல், ஒப்பீட்டு, விபரண ஆய்வு முறைமைகளைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

பதினெண் சித்தர் பாடல்கள் இனம், மதம், சாதி, ஆண் , பெண் எனும் வேறுபாடுகளைக் கடந்து சமூக நல்லிணக்கத்தினை மையப'டுத்தியே அமைந்துள்ளன. சிவவாக்கியர் குதம்பைச் சித்தர், உலோகாயதச்சித்தர், பாம்பாட்டிச் சித்தர், பட்டினத்தார், அகத்தியர் ஆகியோரது பாடல்களானவை தீண்டாமை, ஆண் பெண் சமத்துவம், மனிதனானவன் எவ்வாறு வாழ வேண்டும், அறவாழ்வின் முக்கியத்துவம், சமய ஒருமைப்பாடு என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகநல்லிணக்கத்தை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**உசாத்துணை நூல்கள்:**


- ஆச்சார்யா, பி.எஸ்., (2015), அகத்தியர் முதல் வாரியார் வரை சித்தர்கள் 60 பேர்: வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை.
- இரத்தின நாயக்கர், (1947), பதிணென் சித்தர் ஞானக் கோவை..
- கோவேந்தன், த., சித்தர் பாடல்கள் பட்டினத்ததார் முதல் பாரதியார் வரை, பாவை பப்ளிகேன்ஸ், சென்னை.
- சாமி சிதம்பரனார், (1988), சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்- தத்துவம், இலக்கிய நிலையம், சென்னை.
- நாராயணன்,க., (1988), சித்தர் தத்துவம், தமிழ் புத்தகாலயம், சென்னை.
- மாணிக்கவாசகன், ஞா., (தொகுப்பு), லெட்சுமணன், இரா., (பதிப்பு), (2007) சித்தர் பாடல்கள், உமாபதிப்பகம், சென்னை.
- வரதராஜன்.,ஜி.,(2003) , திருமந்திரம், பழனியப்பா பிரதர்ஸ் , சென்னை.
- ஸ்ரீ வேதநாத சுவாமிகள் 2002, பதினெட்டு சித்தர்கள் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை.
- ஜெகதா, (தொகுப்பு),(2013), சித்தர்கள் களஞ்சியம், பாகம் - 1,ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.